

திருப்பூர் மாவட்டம், காங்கேயம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட முத்தூர் அரசினர் மேல்நிலைப்பள்ளிக்கு முன்னாள் மாணவர் என்ற முறையில் தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக துணைப் பொதுச் செயலாளர் மு.பெ.சாமிநாதன் அய்யன் திருவள்ளுவர் சிலை வழங்கி அதை திறந்து வைத்தார். இதில் முத்தூர் பேரூர் கழக செயலாளர் செண்பகம் பாலு, பேரூராட்சி தலைவர் சுந்தரம்பாள் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### ரூ.103,9 கோடியில் பொதுமக்கள் – மாணவர்கள் பயன்பெறும் வகையில்

# சேலம் - அஸ்தம் பட்டியில் ‘பாரதிதாசன் அறிவுலகம்’ நூலகம்!

## கட்டுமானப் பணிகளை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தொடங்கி வைத்தார்!

சேலம், ஜன. 15 –

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, சுற்றுலாத் துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் அவர்கள், சேலம், அஸ்தம்பட்டியில் ரூ.103.9 கோடி மதிப்பீட்டில் பொதுமக்கள் மற்றும் போட்டித் தேர்வு எழுதிடும் மாணவர்கள் பயன்பெறும் விதமாக ”பாரதிதாசன் அறிவுலகம்” நூலக கட்டுமான பணிகளை தொடங்கி வைத்தார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, நேற்று முன்தினம் (13.01.2026) சுற்றுலாத் துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் சேலம், அஸ்தம்பட்டியில் ரூ.103.9 கோடி மதிப்பீட்டில் பொது மக்கள் மற்றும் போட்டித் தேர்வு எழுதிடும் மாணவர்கள் பயன்பெறும் விதமாக ”பாரதிதாசன் அறிவுலகம்” நூலக கட்டுமான பணிகளை தொடங்கி வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சிக்குப்பின்னர் சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, 2025 – 2026 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்படி போட்டித்தேர்வு எழுதிடும் மாணவர்கள் பயன்பெறும் விதமாக தலா 1 இலட்சம் புத்தகங்கள் மற்றும் பல்வேறு வசதிகளுடன் நூலகம் அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. அதனடிப்படையில் கடந்த 12.06.2025 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சேலம் நிகழ்ச்சியின் போது நூலகத்திற்கு அடிக்கல் நாட்டி வைத்தார்கள்.

அதன் தொடர்ச்சியாக இன்றைய தினம் சேலம் அஸ்தம்பட்டியில் ரூ.103.9 கோடி மதிப்பீட்டில் பொதுமக்கள், போட்டித் தேர்வுகள் பயன்பெறும் விதமாக ”பாரதிதாசன் அறிவுலகம், நூலக கட்டுமானப்பணிகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன. இந்நூலக கட்டடமானது 6,958 சதுர மீட்டர் பரப்பளவில் அமையப்பெற உள்ளது.

பாரதிதாசன் அறிவுலக நூலகத்தின் சிறப்பம்சங்களாக தரைதளம் 1,575 சதுர மீட்டர் பரப்பளவில் 300 இருக்கைகள் கொண்ட கூட்டரங்கம், தனிப்பட்ட புத்தக வாசிப்பறை, விஐபி அறை, கலைக்கூடம், ஆண்கள், பெண்கள், மாற்றுத்திறனாளிகளுக்கென தனித்தனி சுகாதார வளாகங்களுடன் இத்தளம் அமைக்கப்பட உள்ளது.

மேலும், முதல் தளமதானது 1,053 சதுர மீட்டர் பரப்பளவில் போட்டித்தேர்வு பிரிவு, செய்தித்தாள் மற்றும் பருவ இதழ்கள் பிரிவுகளுடனும், 2ஆம் தளமானது 1,198 சதுர மீட்டர் பரப்பளவில் 125 இருக்கைகளுடன் பல்நோக்கு பயிற்சி அரங்கம், 55 இருக்கைகளுடன் கூட்டுப்பணிபுரியும் இடம், அறிவியல் மையம், 50 இருக்கைகளுடன் குழந்தைகள் பிரிவு, 80 இருக்கைகளுடன் கிட்ஸ் தியேட்டர், ஏர்/விஆர் அறைகளுடன் அமையப்பெற உள்ளது.

தொடர்ந்து 3ஆம் தளத்தில் 1,039 சதுர மீட்டர் பரப்பளவில் தமிழ் புத்தக வாசிப்பு பிரிவும், 4ஆம் தளத்தில் 881 சதுர மீட்டர் பரப்பளவில் ஆங்கிலம் புத்தக வாசிப்பு பிரிவும், 5ஆம் தளத்தில் சதுர மீட்டர் பரப்பளவில் 55 இருக்கைகளுடன் டிஜிட்டல் நூலகம், புத்தகக்கட்டுதல் மற்றும் செயலாக்கப்பிரிவு, கொள்முதல் மற்றும் அட்டவணைப்படுத்தும் பிரிவு, அரிய புத்தகங்கள் பிரிவும், 6வது தளத்தில் 527 சதுர மீட்டர் பரப்பளவில் நூலக அலுவலகம், தலைமை நூலகர் அறை, காணொளி அறைகளுடன் அமைக்கப்பட உள்ளது. நூலகம் முழுவதும் பொதுமக்கள் எளிதில் சென்றுவரும் வகையில் 4 மின் தூக்கி வசதிகளும் ஏற்படுத்தப்பட உள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, நூலக கட்டுமானப்பணிகள் அனைத்தையும் உரிய கால அளவில் முடித்து பொதுமக்கள், புத்தக வாசிப்பாளர்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவர தொடர்புடைய அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் சேலம் மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன், பொதுப்பணித்துறை கண்காணிப்புப்பொறியாளர் பாலரவிக்குமார், செயற்பொறியாளர் எஸ்.தியாகராஜன், மாவட்ட நூலக அலுவலர் பாலசுப்பிரமணியன் மற்றும் தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



திருச்சி மாவட்டம், மண்ணச்சநல்லூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட காட்டுக்குளம் மற்றும் புலிவலம் ஊராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ. 50 லட்சம் மதிப்பீட்டிலான பல்நோக்கு மையத்தை சட்டமன்ற உறுப்பினர் எஸ். கதிரவன் திறந்து வைத்தார்.உடன் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஈரோடு மா. சுப்பிரமணியம்

### சனவரி 15 (2013)



ஈரோடு மாவட்ட தி.மு.க. முன்னணித் தலைவர்களில் ஒருவராக விளங்கியவர்

ஈரோடு தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராகவும் – ஈரோடு நகராட்சி மன்றத் தலைவராகவும் சிறப்பாகப் பணியாற்றியவர்.

நெருக்கடிநிலை காலத்தில் மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

“ ‘மா.சு’ என்று கழகத்தினரால் அழைக்கப்பட்டவர். இவரது குடும்பம் கழகத்திற்காக ஆற்றிய பணிகள் ஏராளம். குறிப்பாக நெருக்கடிநிலை நேரத்தில் ஈரோட்டில் தங்குவதற்கு விடுதிகள் எல்லாம் மறுக்கப்பட்ட நிலையில், அவரது இல்லத்தில் என்னைத் தங்க வைத்து உபசரித்ததை என்னால் என்றைக்கும் மறக்க முடியாது” என தலைவர் கலைஞர் அவர்கள் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## திருச்சி மத்திய மாவட்டம்

## திருச்சி மேற்கு மாநகரம்

### உறையூர் பகுதி, தில்லைநகர் பகுதி, திருவரங்கம் கிழக்கு பகுதி, திருவரங்கம் மேற்கு பகுதி, திருவானைக்கோவில் பகுதி ஆகிய பகுதிகளில் அடங்கியுள்ள வட்டங்கள் விவரம் மற்றும் வட்டக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

### தலைமைக் கழகம் அறிவிப்பு!

கழக நிர்வாக வசதிக்காகவும் – கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும், திருச்சி மத்திய மாவட்டம், திருச்சி மேற்கு மாநகரம், உறையூர் பகுதியில் உள்ள 9வது வட்டம், 9, 9–அ ஆகிய 2 வட்டங்களாகவும் – 11வது வட்டம், 11, 11அ ஆகிய 2 வட்டங்களாகவும் – தில்லைநகர் பகுதியில் உள்ள 24வது வட்டம், 24, 24அ ஆகிய 2 வட்டங்களாகவும் – திருவானைக்கோவில் பகுதியில் உள்ள 5, 6, 7 ஆகிய 3 வட்டங்கள் 5,5அ, 6, 6அ, 7, 7அ ஆகிய 6 வட்டங்களாகவும் பிரிக்கப்படுவதோடு, திருவரங்கம் பகுதி, திருவரங்கம் கிழக்கு, திருவரங்கம் மேற்கு ஆகிய இரண்டு பகுதிக் கழகங்களாக பிரிக்கப்பட்டு, திருவரங்கம் கிழக்கு பகுதியில் அமையும் 3, 4 ஆகிய 2 வட்டங்கள் 3, 3அ, 4, 4அ, ஆகிய நான்கு வட்டங்களாகவும் – திருவரங்கம் மேற்கு பகுதியில் அமையும் 1, 2 ஆகிய 2 வட்டங்கள் 1, 1அ, 2, 2அ ஆகிய நான்கு வட்டங்களாகவும் பிரிக்கப்படுகிறது.

அவ்வாறு பிரிக்கப்பட்ட வட்டங்களில் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற வட்டக் கழகப் பொறுப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**உறையூர் பகுதி**

**9வது வட்டக் கழகப் பொறுப்பாளர்: திப்புசுல்தான்**
29, பாக்குபேட்டை, உறையூர், திருச்சி.

**9அ–வது வட்டக் கழகப் பொறுப்பாளர்: சி.செந்தில்குமார்**
95, மேட்டுத் தெரு, உறையூர், திருச்சி

**11வது வட்டக் கழகப் பொறுப்பாளர்: த.ராஜசேகர்,**
உறையூர், திருச்சி.

**11அ–வது வட்டக்கழகப்பொறுப்பாளர்:ஜெ.விவேகானந்தன்,**
உறையூர், திருச்சி

**தில்லைநகர் பகுதி**

**24வது வட்டக் கழகப் பொறுப்பாளர்: சங்கர்,** தெற்கு முத்துராஜா தெரு, புத்தூர், திருச்சி

**24அ–வது வட்டக் கழகப் பொறுப்பாளர்: : சாமிநாதன்,**
18, தெற்கு ராமலிங்கம் நகர், திருச்சி.

**திருவரங்கம் கிழக்கு பகுதி**
**(3, 3அ, 4, 4அ ஆகிய நான்கு வட்டங்கள்)**

**3வது வட்டக் கழகப் பொறுப்பாளர்: : பன்னீர்செல்வம்,**
147, கீரைக்காரத் தெரு, திருவரங்கம், திருச்சி

**3அ–வது வட்டக் கழகப் பொறுப்பாளர்:** : ரா. கார்த்திகேயன்,
சி–38, கீழ அடையவளஞ்சான் வீதி, முனீஸ்வரன் கோவில் எதிரில், திருவரங்கம், திருச்சி

**4வது வட்டக் கழகப் பொறுப்பாளர்: : பாலாமணி,** 32/9,
சீனிவாசா நகர், காந்தி ரோடு, திருவானைகோவில், திருச்சி

**4அ–வது வட்டக் கழகப் பொறுப்பாளர்: : ஒ. சுரேஷ்குமார்**
எம்எஸ்கே அம்பேத்கார் நகர், திருவரங்கம், திருச்சி

**திருவரங்கம் மேற்கு பகுதி**
**(1, 1அ, 2, 2அ ஆகிய நான்கு வட்டங்கள்)**

**1வது வட்டக் கழகப் பொறுப்பாளர்: : குமரேசன்,** 13,
செம்படத் தெரு, மேலூர், திருவரங்கம், திருச்சி

**1அ–வது வட்டக் கழகப் பொறுப்பாளர்: : ச. ஹரிஹரன்,**
36, 2வது தளம், ரோகிணி ரமணியம் அடுக்குமாடி குடியிருப்பு திருவரங்கம், திருச்சி

**2வது வட்டக் கழகப் பொறுப்பாளர்: : ரங்கராஜன்,** 110,
சாத்தார வீதி, திருவரங்கம், திருச்சி

**2அ–வது வட்டக் கழகப் பொறுப்பாளர்: : வ.வசந்தகுமார்**
55/36, வடக்கு வாசல், கொள்ளிடம் ரோடு எம்.கே.பாலாஜி, 21, டி–பிளாக், ஆண்டிமானியதோட்டம்.

**திருவானைக்கோவில் பகுதி**

**5வது வட்டக் கழகப் பொறுப்பாளர்: : பிரகாஷ்,** 65எ,
வெள்ளாளர் தெரு, மேலக்கொண்டையம்பேட்டை, திருவானைக்கோவில், திருச்சி.

**5அ–வது வட்டக் கழகப் பொறுப்பாளர்: : மு. தங்கவேல்**
பாரதி தெரு, திருவானைக்கோவில், திருச்சி

**6அவது வட்டக் கழகப் பொறுப்பாளர்: : ஜெனார்த்தனம்**
தாகூர் தெரு, திருவானைக்கோவில், திருச்சி

**6அ–அவது வட்டக் கழகப் பொறுப்பாளர்::கை.கருணாநிதி**
63, பொன்னுரங்கபுரம், திருவானைக்கோவில், திருச்சி

**7வது வட்டக் கழகப் பொறுப்பாளர்: : ப.சிவக்குமார்**
பார்வதியம்மன் நகர், வீரேஸ்வரம், திருவரங்கம், திருச்சி 7.

**7அ–வது வட்டக் கழகப் பொறுப்பாளர்: : பால்ராஜ்,** 37,
கீழத் தெரு, வீரேஸ்வரம் திருவரங்கம், திருச்சி

"அண்ணா அறிவாலயம்"
சென்னை – 18
நாள்– 13.01.2026

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.



தருமபுரி மாவட்ட பழைய ஆட்சியர் அலுவலக வளாகத்தில் பத்திரிக்கையாளர்கள் சார்பில் நடத்தப்பட்ட சமத்துவப் பொங்கல் விழாவினை தருமபுரி மாவட்ட ஆட்சியர் சதீஸ், தருமபுரி கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் வழக்கறிஞர்.ஆ.மணி எம்.பி,தருமபுரி மேற்கு மாவட்டச் செயலாளர் முனைவர். பி.பழனியப்பன் ஆகியோர் துவக்கி வைத்தனர்.விழாவில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எஸ்.எஸ்.மகேஸ்வரன், மாவட்ட வருவாய் அலுவலர் கவிதா, கோட்டாட்சியர் காயத்ரி, பத்திரிக்கையாளர்கள் முரசொலி மணி, வேணு, ஸ்ரீதர், சரவணன், அரசகுமார் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு சார்பில் - சமத்துவப் பொங்கல் விழா!

## செயலாளர் - டாக்டர்.அ.சுபேர்கான் தலைமையில் நடைபெற்றது!

*சென்னை, ஜன.15-*

*சிறுபான்மையின மக்களின் உரிமைகளை காத்திடும் கழகத் தலைவர் முதல்வர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படியும், துணை முதல்வர் அவர்களின் அறிவுறுத்தலின்படியும் கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் சார்பில் சென்னை இராயபேட்டையில் சமத்துவப்பொங்கள் விழா செயலாளர்டாக்டர்.அ.சுபேர்கான் தலைமையில்நடைபெற்றது. இந்நிகழ்வில் கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் மாநில இணைச் செயலாளர் ஜெரால்டு, மாநில துனைச் செயலாளர்கள் அடையாறு சபீல் கான், கா.ரபி அகமது, ராபர்ட் ராஜதுரை சென்னை மேற்கு மாவட்ட அமைப்பாளர்எஸ்.எச்.ரகமத்துல்லா, மாவட்ட துணை தலைவர்முகமது அப்சல், ஜப்பார ஜலாலுதீன், விசாஸ் அலி கான், காசிம், அமானுல்லா, வடக்கு மாவட்ட அமைப்பாளர் எம்.ஆர்.டி.அப்துல் ரகுமான், துணை அமைப்பாளர்கள் டி.அசோக்ராஜ், யு. அனிபா, சென்னை கிழக்கு மாவட்ட அமைப்பாளர் பெரோஸ் கான், மாவட்ட துணை தலைவர் பால்மோகன், துணை அமைப்பாளர்கள் சந்தானராஜ், ஜான் ரூவில், இம்ரான், தென்மேற்கு மாவட்ட தலைவர் ஷேக் தாவூத், துணை அமைப்பாளர்கள் அலெக்ஸ், உத்திரியம், எஸ்.கே.நசீர், தெற்கு மாவட்ட தலைவர் கரி முல்லா, துணை அமைப்பாளர் அன்புரோஸ், ஜெயபிரகாஷ், காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட அமைப்பாளர் நூருல் அமீன், மாவட்ட தலைவர் மகாவீர் ஜெயின், திருவள்ளூர் மத்திய மாவட்ட அமைப்பாளர் கரிகாலன் @ ஷாஜகான், துணை அமைப்பாளர் பாருக், திருவள்ளூர் மேற்கு மாவட்ட அமைப்பாளர் ஜி.சித்திக் அலி, துனை அமைப்பாளர் திரு.பாஷா, க.இ.மாத்தூர் பன்னீர்செல்வம், பகுதி கழக நிர்வாகிகள் வேளச்சேரி எஸ்.கே.நசீர், மயிலை சுலைமான், ரகுமான் கான், திருவல்லி க்கேணி ரசாக், பிலால், இராயபுரம் நூருல் அமீன், பழவை.ஹாஜா, மீஞ்சூர் சரவணன் ஆண்ரூஸ், மற்றும் பேராயர்கள் திரு.பர்ணபாஸ், திரு.போல் ஞானம், பாஸ்டர் ஜோஷ்வா, பாஸ்டர் வெஸ்லி, அருட்திரு. இரா. மேத்யூ, அருட்திரு.இளவரசன், அருட்திரு.லாரன்ஸ், அருட்திரு. சௌரி ராஜன், அருட்திரு. மேனுவேல் சுந்தர் சிங் மற்றும் ஏனைய கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் மாவட்ட, மாநகர, பகுதி, நகரம், பேரூர் மற்றும் ஒன்றிய கழக நிர்வாகிகள் திரளாக பங்கேற்று பொங்கல் விழாவினை சிறப்பித்தனர்.*

## சென்னை தெற்கு மாவட்ட பொதுக்குழு உறுப்பினர்

# பி.எஸ்.முருகேசனின் தந்தை மறைவு!

### கழகத் தலைவர் – முதல்வர் மு.க,ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜன.15 –

சென்னை தெற்கு மாவட்ட – கழகப் பொதுக்குழு உறுப்பினர் பி.எஸ். முருகேசனின் தந்தை மறைவுற்றார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

இச்செய்தி அறிந்து வருந்திய கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அன்னாரின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து விடுத்துள்ள செய்தி வருமாறு:–

சிவகங்கை மாவட்டம் – மானாமதுரை தொகுதி – இளையான்குடி ஒன்றியம் – வடக்கு சீரனூர் கிராமத்தைச் சேர்ந்த கழகத் தோழரும் – சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க. பொதுக் குழு உறுப்பினர் – கலைஞர் நகர் பி.எஸ்.முருகேசனின் தந்தையுமான ப.சுப்பிரமணியன் அவர்கள், நேற்று முன்தினம் 12.01.2026 அன்று தமது 92–வது வயதில் உடல்நலக் குறைவால் இயற்கை எய்தினார் எனும் செய்தியறிந்து வருந்துகிறேன்.

அன்னாரை இழந்து துயருறும் – கழகப் பொதுக்குழு உறுப்பினர் பி.எஸ்.முருகேசன் உள்ளிட்ட அன்னாரின் குடும்பத்தினருக்கு எனது ஆறுதலையும் – அன்னாரின் மறைவுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அந்த இரங்கல் செய்தியில் கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.




தருமபுரி கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் வழக்கறிஞர்.ஆ.மணி எம்.பி. அறிவுரைப்படி நகர கழக செயலாளர் முல்லை.ரவி தலைமையில் “என் வாக்குச்சாவடி, வெற்றி வாக்குச்சாவடி” கூட்டம் அரூரில் நடைபெற்றது. கூட்டத்தில் இளைஞர் அணி பாக அமைப்பாளர்கள் சசிகுமார், விஜய் விக்ரம், BLA2 உமா கண்ணையன் புவனேஸ்வரி , BDA சூர்யா மித்ரன் , BLC மற்றும் கழக உறுப்பினர்கள், கலந்துகொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### தியாகி நடராசன் (தாளமுத்து)

### சனவரி 15 (1939)



சென்னை பண்ணைக்கார ஆண்டியப்பன் தெருவைச் சேர்ந்த நடராசன், தன் பெற்றோரிடம் “நான் இந்தி எதிர்ப்புப் போரில் ஈடுபட விரும்புகிறேன். தமிழர்களின் பின் சந்ததியர்க்காகச் சிறை செல்ல நான் பின்னடையப் போவதில்லை” என்றபோது, முழுமனதோடு தன் ஒரே மகனுக்கு ஒப்புதல் அளித்தார்கள் பெற்றோர்.

5.12.1938 அன்று மறியல் களம் சென்று இந்தி எதிர்ப்புப் போரில் பங்குபெற்று ஆறு மாத கடுங்காவல் தண்டனை பெற்று சிறை சென்றார்.

சிறையில் காய்ச்சல் ஏற்பட்டு நிலைமை கவலைக்கிடமான போதும், சிறைக் காவலர்கள் மன்னிப்புக் கேட்டுவிட்டு வெளியேறும்படி எவ்வளவோ மன்றாடினர், வற்புறுத்தினர். ஆனாலும் “செத்தாலும் சிறையில் சாவேனே ஒழிய, மன்னிப்பு என்ற பேச்சே கிடையாது” எனத் தெரிவித்து சிறையிலேயே தன் வாழ்க்கையை முடித்துக் கொண்டவர்.

சிறைச் சாலையில் இறந்துபோன நடராசனும், தாளமுத்துவும்தான் இந்தி எதிர்ப்புப் போரில் முதல் களப்பலிகள்.

தலைமைக் கழகம்
தி.மு.க.